வட.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல. 17/2025

எனது இல. NP/07/10/01/185(I)
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
2025.05.21

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

## வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழான நன்னடத்தை உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2025

அமைச்சரவை அலுவலகத்தின் CP/DEC/25ம் இலக்க 2025.02.19ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள 2025.02.19ம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரமும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரின் கோரிக்கைக்கு அமைவாகவும், வடக்கு மாகாண பொதுச் சேவையின் **நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழான நன்னடத்தை உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு** நிலவும் வெற்றிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இதற்கமைய, இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளுமுடைய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க முடியும். இவ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் நடாத்தப்படவுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி ***2025.06.13*** ஆகும்.

## 2. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள்

2.1 வடக்கு மாகாண கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்டு 2013.01.01ம் திகதி முதல் செயல்வலுவிலுள்ள நன்னடத்தை உத்தியோகத்தர் பதவிக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் 2016.07.12ம் திகதி முதல் செயல்வலுவிலுள்ள நன்னடத்தை உத்தியோகத்தர் பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டம் என்பவற்றில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் அவற்றில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களிற்கு அமையவும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30ம் இலக்க 2013.07.03ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் **நன்னடத்தை உத்தியோகத்தர் பதவியின் தரம் II** இற்கு நியமிக்கப்படுவர்.

2.2 இப் பரீட்சையின் மூலம் நியமனத்திற்கு தகைமை பெற்ற பரீட்சார்த்திகள் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதித்துரைக்கப்பட்ட தகுதிகாண் கால அடிப்படையில் **நன்னடத்தை உத்தியோகத்தர் தரம் II** பதவிக்கு நியமிக்கப்படுவர். எனினும், திணைக்களத் தலைவர் குறித்த அலுவலரின் பணி, நடத்தை மற்றும் வரவு ஆகியவற்றில் திருப்தியடையவில்லையாயின் அத் தகுதிகாண் காலம் நீடிக்கப்படலாம்.

2.3 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு மேற்குறித்த பதவியின் தரம் II இற்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

2.4 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்.

2.5 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். இப்பதவிக்கு நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் அவர்களின் 2025.04.25ம் திகதிய கடிதம் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை அடிப்படையில் நிரப்புவதற்காக அறிவிக்கப்பட்ட **30%** வெற்றிடம் **இரண்டு (02)** ஆகும். எனினும், அறிவிக்கப்பட்ட இவ் வெற்றிடங்கள் தொடர்பில் பகுதியளவு வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

2.6 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து 03 வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரசகரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

## 3. சம்பள அளவுத்திட்டம் :-

2025.03.25ம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 5 – 2025** ற்கு ஏற்ப **நன்னடத்தை உத்தியோகத்தர் தரம் II** ற்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டமானது ரூபா **58,660 – 10 x 1,190 - 11 x 1,360 - 15 x 1,670 – 110,570/-** ஆகும். (ரூபா. 62,230 சம்பள படிநிலைக்கு முன் 1வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்)

## 4. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :-

**அ)** விண்ணப்ப முடிவுத் திகதியில் வடக்கு மாகாண அரச சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதும், அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 10/2025 இன் பிரகாரம் MN 2 - 2025, MN 3 - 2025, MN 4 - 2025 ஆகிய சம்பளக் குறியீடுகளைக் கொண்ட பதவியொன்றில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் ஆகக் குறைந்தது **ஐந்து (05)** வருடகாலப் பகுதியில் முனைப்பானதும், திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமான வடக்கு மாகாண அரச சேவையின் நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு திணைக்களத்தில், அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 10/2025 இன் பிரகாரம் MN 1 - 2025 சம்பளக் குறியீட்டைக்கொண்ட பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் ஆகக் குறைந்தது **ஐந்து (05)** வருடகாலப் பகுதியில் முனைப்பானதும், திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

**ஆ)** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து, சமூகவியல் (Sociology) / உளவியல் (Psychology) / குற்றவியல் (Criminology) / சட்டம் (Law) / சமூகப்பணி (Social Works) / போசாக்கு (Nutrition) / தத்துவவியல் (Philosophy) / முயற்சியாண்மை (Entrepreneurship) / உளவள ஆலோசனை (Counselling), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (Information Technology), முகாமைத்துவம் (Management), அளவையியல் (Logic), அரசறிவியல் (Political Science), நிர்வாகம் (Administration), மானுடவியல் (Anthropology) ஆகிய பாடங்களில் யாதாயினும் ஒன்றை பிரதான பாடமாகவோ அல்லது துணைப் பாடமாகவோ கொண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழக **இளமானிப் பட்டம்.**

## 5. பொதுவான தகைமைகள் :-

விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **கல்வித் தகைமை உட்பட, பின்வரும் சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

5.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் தனது பதவிக்குரிய கடமைகளை ஆற்றுவதற்கு உகந்த சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராகவும் சிறந்த நன்னடத்தை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

5.3 விண்ணப்பதாரி இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முன்னரான ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது தொடர்ச்சியாக மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின் போது தமது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலினை சமர்ப்பித்தல் வேண்டும்)

அல்லது

விண்ணப்பதாரி அல்லது அவரது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன், வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக ஐந்து (05) ஆண்டுகள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின் போது தமது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலினை சமர்ப்பித்தல் வேண்டும்)

5.4 விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முந்தைய 05 ஆண்டுகளில் ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கு உட்படாமலிருத்தல் வேண்டும்.

5.5 விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முந்தைய 05 ஆண்டுகளில் அனைத்து சம்பள உயர்வுகளையும் உரிய திகதிகளில் உழைத்துப் பெற்றிருக்க வேண்டும்.

5.6 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமான ஆட்சேர்ப்பு என்பதால் **உச்ச வயதெல்லை** ஏற்புடையதல்ல.

## 6. ஆட்சேர்ப்பு முறை :-

6.1 எழுத்து மூலப்போட்டிப்பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், சேவைப் பிரமாணக்குறிப்பு, ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாக **நன்னடத்தை உத்தியோகத்தர் தரம் II** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் விண்ணப்பதாரர்களிடம் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். ஆட்சேர்ப்பின்போது அல்லது ஆட்சேர்ப்பின் பின்னர் தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். இவ்விளம்பரத்தின் மூலம் கோரப்பட்ட சகல தகைமைகளும், அதனை நிரூபிக்கும் ஆவணங்களும் நேர்முகப்பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

6.2 எழுத்துப்பரீட்சையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகளிலிருந்து, அவர்கள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் உயர் புள்ளி ஒழுங்கில் நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

## 7. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி, பரீட்சைக் கட்டணம் ரூபா. 500.00 ஐ வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகமொன்றிலும் காசுக்கட்டளையாக **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்கு **யாழ்ப்பாணம் பிரதான தபால் அலுவலகத்தில்** மாற்றக் கூடியவாறு செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 8. விண்ணப்பிக்கும் முறை :-

8.1. இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து, அதனை **2025.06.13**ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது கைமூலத் தபாலிலோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

8.2. விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/185(I) - 2025"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

8.3. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களத்தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். திணைக்களத் தலைவர் சிபார்சு செய்யாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8.4. விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப் பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும். எவ்வாறாயினும், **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படுதலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.**

8.5. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. எனினும், விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பில் உரிய விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

8.6. விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி, பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய கோரிக்கைக் கடிதம் மூலம் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல: **021 221 9939** / தொலைநகல் இல: **021 221 9940** / மின்னஞ்சல்: **exampPSCNP@gmail.com**)

- பரீட்சையின் பெயர்.
- விண்ணப்பதாரியின் முழுப்பெயர்.
- தேசிய அடையாள அட்டை இலக்கம்.
- விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி.
- விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி.
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி.
- விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி.
- பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி.
- அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

## 9. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை
(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை பரீட்சைக்கு தோற்றும்போது சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமை செயலாளர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அவர்களின் தற்றுணிவின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

## 10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்த உரிமைந அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

## 11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.** விண்ணப்பதாரி தமது நிறுவனத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

## 12. பரீட்சைத் திட்டம் :-

இப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும். இது தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும். எனினும் தகைமையடைந்த சிங்கள மொழி மூல விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமிடத்து சிங்கள மொழி மூலத்திலும் பரீட்சை நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. **பரீட்சை வினாப்பத்திரங்களுக்கான பாடவிதானங்கள் இணைப்பு - I இல் காட்டப்பட்டுள்ளது.**

எவ்வாறாயினும், இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நியமன அதிகாரியால் நியமிக்கப்படும் நேர்முகத்தேர்வு சபையினால் நடாத்தப்படும் நேர்முகத்தேர்வுக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவதற்காக எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் **நாற்பது வீத (40%)** புள்ளிகளைப் பெறுவதுடன், இரு வினாப்பத்திரங்களுக்காகவும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள், **ஐம்பது வீதத்திற்கும் (50%)** குறையாதிருத்தல் வேண்டும். இப் போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்ற உயர் புள்ளிகளின் வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

**கவனிக்கவும்:-**

(i) இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iii) இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

(iv) இவ்வறிவித்தலை தங்களது அமைச்சு / திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் தகைமையுள்ள சகல உத்தியோகத்தர்களின் கவனத்திற்கும் கொண்டு வரவும்.

(v) இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**பொ.குகநாதன்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
2025.05.21

பொ.குகநாதன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

<table>
<tr><th>இல</th><th>வினாப் பத்திரம்</th><th>பாட விதானம்</th><th>நேரம்</th><th>புள்ளிகள்</th></tr>
<tr><td rowspan="2">01.</td><td>வேலை தொடர்பான நுட்பவியல்</td><td>1.1 நடைமுறையிலுள்ள சிறுவர் உரிமை சமவாயம் மற்றும் சிறுவர் தொடர்பான சட்டங்கள்<br><br>1.2 சிறுவர் விருத்தி<br>1.2.1. சிறுவர் விருத்தி தொடர்பான அறிமுகம்<br>1.2.2. சிறுவர் விருத்தி படிநிலைகளும் வயதும்<br>1.2.3. விருத்தி குறைபாடுகள்<br>1.2.4. ஆளுமை விருத்தி</td><td rowspan="2">03<br>மணித்தியாலங்கள்</td><td rowspan="2">100</td></tr>
<tr><td>Case work Techniques</td><td>1.1 Current update of the Child Right Convention & Child related laws<br><br>1.2 Child Development<br>1.2.1 Introduction to Child Development<br>1.2.2 Ages and Stages of Child Development<br>1.2.3 Development Disorders<br>1.2.4 Personality Development</td></tr>
<tr><td>02.</td><td>சமூகப்பணி நுட்பங்கள் மற்றும் களப்பணி நுட்பங்கள்</td><td>• நுண்நிலை, நடுத்தர நிலை மற்றும் பரந்தநிலை தலையீடுகள்.<br>• சமூக குழுக்களின் பண்புகள்.<br><br>குழு உறுப்பினர்கள், பொதுவான குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகள், ஒரே வகையான பன்முகத்தன்மை கொண்ட குழுக்கள் மற்றும் குழு உருவாக்கம்.<br>• சமூக குழு வேலை செயல்முறை.<br><br>குழு வளர்ச்சியின் நிலைகள், குழு இயக்கவியல் மற்றும் குழுப்பணிச் செயற்பாட்டில் சமூகப் பணியாளரின் பங்கு.<br>• சமூகக் குழுப்பணியின் கொள்கைகள் மற்றும் பெறுமானங்கள்.<br><br>எட்டு சமூகக் குழு வேலைகள் தொடர்பான கொள்கைகள், பெறுமானங்களும் தத்துவங்களும்.<br><br>• இலங்கையிலுள்ள பல்வகை சமூகங்கள்.<br><br>கிராம மற்றும் நகர, ஒரே மாதிரியான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட இனச்சமூகங்கள்.<br>• சிறுவர் வழக்கு தொடர்பான மாநாடுகள்</td><td>03<br>மணித்தியாலங்கள்</td><td>100</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | • சிறுவர் வழக்குகள் தொடர்பான முகாமைத்துவம்<br>• குடும்பங்களுக்கான குழு கலந்துரையாடல்கள்<br>• இடையீடுகளை செயற்படுத்துவதற்கான திறன்கள் | | |
| | Social Work Techniques & Field Work Techniques | • Micro level Interventions, Mid-level Interventions and Macro Level Interventions.<br>• Characteristics of Social groups<br>Group members, common goals and activities, homogeneous and heterogeneous groups and group formation<br>• Social group work process<br>Stages of group development, group dynamics and roles of the social worker in group work process.<br>• Social of group principles and Values<br>Eight social group work principles, Values and Philosophy.<br>• Type of Communities in Sri Lanka<br>Rural and Urban, homogeneous and heterogeneous, ethnic communities.<br>• Case Conferences<br>• Case Management<br>• family group conferencing<br>• Skills for implementing the intervention techniques | | |